සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2023
Third Term Test - Grade 09 - 2023

# சுகாதாரமும் உடற்கல்வியும்

நேரம்: 2 மணி.

பெயர்:

## பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01. ஆளிடைத் தொடர்பானது அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும், சுற்றுப் புறச் சூழலை சமநிலையுடனும் பேணுவது எவ்வாறு அழைக்கப்படும்?
i. சமூக ஆரோக்கியம் என    ii. பூரண சுகாதாரம் என
iii. சூழல் சமநிலை என    iv. சுகாதார மேம்பாடு என

02. சூழல் மாசடைவதால் தொற்றாத நோயானது?
i. டெங்கு    ii. கொலரா    iii. வயிற்றுப்போக்கு    iv. நீரப்பய நோய்


03. துடுப்பைப் பாவித்து விளையாடும் விளையாட்டானது?
i. மல்யுத்தம்    ii. கோல்ப்    iii. வலைப்பந்து    iv. வோடர் போலோ

04. வொலிபோல் விளையாட்டின் திறன்கள் மாத்திரம் அடங்கிய விடையானது?
i. பணித்தல், உள்ளெறிகை, தாக்குதல், அறைதல்
ii. பணித்தல், தாக்குதல், தடுத்தல், ஒழுங்குபடுத்தல்
iii. பணித்தல், பெற்றுக் கொள்ளல், ஒழுங்குபடுத்தல், அறைதல்
iv. பணித்தல், உள்ளெறிகை, ஒழுங்குபடுத்தல், அறைதல்

05. நியம அளவுள்ள ஓடுபாதையொன்றில் 4x100m அஞ்சலோட்டப் போட்டிக்கு மிகப் பொருத்தமான குறுங்கோல் மாற்றும் முறையானது?
i. உட்பக்க மாற்றல்    ii. வெளிப்பக்கமாற்றல்
iii. கத்தரி மாற்றல்    iv. கலப்பு மாற்றம்

06. பல்வேறு உணவு வகைகளை மெல்லுவதற்கேற்ற வகையில் வாயில் வெவ்வேறு வடிவமுடைய பற்கள் காணப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு வடிவமுடைய பற்கள் காணப்படுவது ....................................... என அழைக்கப்படும்.
i. இருவகைப் பல்    ii. விகாரப் பல்    iii. பல்லினப் பல்    iv. சமனற்றப் பல்

07. படத்தில் காட்டப்பட்ட “பாய்ந்து மேலே தொடுதல்” சோதனையால் அளவிடப்படும் உடற்றகைமைக் காரணி?
i. இதயம் குருதி கலன்சார்ந்த தாங்கு திறன்    ii. நெகிழும் தன்மை
iii. தசை நார்களின் தாங்கு திறன்    iv. உடற் கொள்ளளவு




08. தீக்குவியல் கண்காட்சியின் போது பாடல்கள் மற்றும் நாடகம் என்பன அரங்கேற்றுவதன் மூலம் விருத்தியடையும் ஆற்றலானது?
i. பங்குபற்றும் ஆற்றல்    ii. ஆக்கத்திறன்
iii. தமது கலாச்சாரத்தை வெளிக்காட்டல்    iv. இவை யாவும்

09. அன்றாட வாழ்வில் நாம் எதிர்நோக்கும் எதிர்பாராத பிரச்சினையின் போது அதனை வெற்றிகரமாக தீர்க்கும் போது கவனத்தில் கொள்ளக்கூடாத விடயமொன்றானது?
i. மற்றவர்களின் கருத்துக்கு இடம் கொடுத்தல்
ii. பிரச்சினைத் தீர்ப்பது தொடர்பாக மறைவகையான சிந்தனை
iii. பிரச்சனையின் போது பொறுமையுடன் செயற்படல்
iv. சுயாதீனமாகவும் விரைவாகவும் முடிவெடுத்து செயற்படல்

10. நாம் வாழும் சமூகத்தின் ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சமூகச் சவால் ஒன்றானது?
i. ஆரோக்கியமில்லாத உணவுப் பழக்க வழக்கம் ii. நோய்
iii. காலநிலை வேறுபாடும் அனர்த்தங்களும் iv. இவை யாவும்


11. மனித நிலைத்திருப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் தொற்று அல்லாத நோய்?
i. டெங்கு ii. நீரிழிவு iii. மலேரியா iv. காச நோய்

12. படத்தில் காட்டியபடி சமதரை நிலத்தில் அகழி தோண்டி அமைக்கும் அடுப்பானது?



i. அகழி அடுப்பு ii. வண்டிக்கார அடுப்பு
iii. அலகு அடுப்பு 4) கல்வரிசை அடுப்பு

13. ஆபத்தான சந்தர்ப்பங்களில் உயிரைப் பாதுகாப்பதை உறுதி செய்ய பயன்படுத்தும் முடிச்சு படத்தில் காட்டப்பட்டுள்ளது இது




i. வழுக்காத சுருக்கு முடிச்சு ii. பலாப்பட்டை முடிச்சு
iii. ராவல் முடிச்சு iv. ஆண் முடிச்சு

14. பிறப்பிற்கு பின்னர் விட்டமின் D உடலுக்கு போதியளவு கிடைக்காததால் ஏற்படும் நோய் நிலைமையானது?
i. ஒஸ்டியோ பொரோசிசு ii. ரிகட்சியா iii. கொனோரியா iv. தலசீமியா

15. எதிரணி பகுதியிலிருந்து வரும் பந்து வலைக்கு மேலாக உள்ளபோது முன்வரிசை வீரர்களால் தமது பகுதிக்கு வரமுன் வலைக்கு அண்மையில் வைத்து இடையூறு செய்வது அழைக்கப்படுவது?
i. தடுத்தல் ii. காத்தல் iii. தாக்குதல் iv. பெற்றுக் கொள்ளல்

16. படத்தில் காட்டப்படுவது உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் பயன்படுத்தப்படும் மிக அனுகூலமான நுட்ப முறையாகும் அந்நுட்ப முறையானது?
i. கத்தரிப் பாய்ச்சல் ii. பொஸ்பெரி புளப் முறை
iii. ஸ்ரெடில் முறை iv. மேலைத் தேய முறை



17. முன்கட்டிளமைப் பருவம் விசேட பருவமொன்றாகும். முன் கட்டிளமைப் பருவத்தின் வயதெல்லையானது?
i. 10 - 20 வயது ii. 12 - 18 வயது iii. 10 - 19 வயது iv. 10 - 25 வயது

18. எமது தலைமயிரின் ஆரோக்கியம் பேண பின்பற்றக்கூடிய நடைமுறையானது?
i. தர நிர்ணயம் இல்லாத பூச்சு வகையை பயன்படுத்துவதை தவிர்த்தல்
ii. பதப்படுத்திய உணவுகளை பெற்றுக் கொள்ளல்
iii. கடுமையான வெய்யிலில் தலைமயிரை திறந்திருத்தல்
iv. செயற்கை முறையில் தலை மயிரை தயார் செய்தல்

19. உள நெருக்கீடு என்பதால் கருதப்படுவது?
i. சவாலான சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் போது உடல் உள ரீதியாக எங்களில் ஏற்படும் பிரதிபலிப்பாகும்
ii. ஏதாவது சவாலுக்கு முகங்கொடுக்க ஒரு நபரில் காணப்படும் பொறுமையாகும்
iii. சவாலின் போது முடிவெடுக்கும் ஆற்றலாகும்
iv. சவால் ஒன்றுக்கு முகங்கொடுக்க நேரிடும் போது அதற்கெதிராக உடலில் ஏற்படும் தகைமையாகும்

20. வடமேல் மாகாணத்தில் பிறந்த தற்போதைய இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணியின் தலைவி
i. சிரியாணி குலவங்ச ii. சசிகலா சிரிவர்தன
iii. கவி'ா தில்ஹானி iv. சமரி அதபத்து

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது**
- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக**

01. குளியாப்பிட்டிய வித்தியாலயத்தின் சுகாதார வாரம் தொடர்பான செயலமர்வில் கலந்துகொண்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஆற்றிய உரையில், எமது ஆரோக்கியத்திற்கு தடையாக அமையும் சுற்றாடல் சவால்கள் தொடர்பாக மாணவர்களை அறிவூட்டினார். அதன் போது அச்சவால்களுக்கு வெற்றிகரமாக முகங் கொடுக்கும் முறைகளை இனங்காண்பதன் மூலமாக உடல், உள, சமூக நல்லாரோக்கிய வாழ்க்கையை வாழ முடியும் என விளக்கமளித்தார். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் வொலிபோல் விளையாட்டில் ஈடுபட்டனர்.

i. செயற்கையான உணவு நுகர்வால் ஏற்படக்கூடிய நோய்கள் இரண்டு எழுதுக.
ii. தொற்று நோய்களின் நோய்க் காரணிகள் பரவும் முறைகள் இரண்டு குறிப்பிடுக.
iii. காலநிலை வேறுபாடு மற்றும் அனர்த்தங்கள் காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்பான நிலைமைகளை இழிவளவாக்க எடுக்கக்கூடிய செயற்பாடுகள் இரண்டு எழுதுக.
iv. பந்தியில் குறிப்பிட்ட விளையாட்டில் ஈடுபடும் வீரர்களின் எண்ணிக்கையை தருக.
v. ஓய்வை பயனுள்ளவாறு கழிக்க மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் இரண்டு தருக.
vi. ஆரோக்கியமாக உடலைப் பேண நீர் இன்றியமையாத ஒன்றாகும். அதன்படி ஆரோக்கியமான ஒரு நபர் ஒரு நாளைக்கு எவ்வளவு நீர் அருந்த வேண்டும்.
vii. சூழல் மாசடைதலை இழிவாக்க நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் இரண்டு எழுதுக.
viii. தற்கால சமூகத்தில் மதுபானமும் போதைப் பொருள்களும் பாரிய சமூக பிரச்சினையாகவுள்ளது. இம் மதுபானம் மற்றும் போதை பொருளை ஒழிக்க நீர் முன்வைக்கும் தீர்வுகள் இரண்டு எழுதுக.
ix. கிடை மற்றும் நிலைக்குத்துப் பாய்ச்சல்களுக்கு உதாரணம் ஒன்று வீதம் தருக.
x. தீக்குவியல் எரிப்பதால் கிடைக்கும் பயன்கள் இரண்டு எழுதுக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02. ஆரோக்கியமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதில் சுகாதார மேம்பாடு முக்கியத்துவம் வகிக்கின்றது.

i. சமூக சுகாதார மேம்பாடு என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)
ii. சுகாதார மேம்பாடு ஏற்பட்டுள்ள சமூகத்தில் காணக்கூடிய இயல்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
iii. சமூக சுகாதார மேம்பாற்டை ஏற்படுத்துவதற்கு சமூகத்துடன் சேர்ந்து செய்யக்கூடிய செயற்றிட்டங்கள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)
iv. சமூக சுகாதார மேம்பாட்டின் கருப்பொருள்கள் நான்கு எழுதுக (04 புள்ளிகள்)

03. ஆரோக்கியமான ஒரு நபராக செயற்படுவதில் சமநிறை உணவும் விளையாட்டும் முக்கியமானது.

i. ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டென்பதை விளக்குக. (02 புள்ளிகள்)
ii. ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுகளின் சிறப்பியல்புகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)
iii. வெளிக்கள செயற்பாடுகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)
iv. வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடுவதால் பெற்றுக் கொள்ளகூடிய உடல் அல்லது உள-சமூக தேவைகள் இரண்டு குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

04. மெய்வல்லுனர் வகைப்படுத்தலின்படி மைதான நிகழ்ச்சியாக எறிதல் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம்.

i. நீர் அறிந்த எறிதல் நிகழ்ச்சிகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)
ii. எறிதல் நிகழ்ச்சிகளுக்குரிய விதி முறைகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)
iii. எறிதல் நிகழ்ச்சி அல்லாத நீர் அறிந்த மைதான நிகழ்ச்சிகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)
iv. ஈட்டி எறிதலை வீரர் ஒருவருக்கு பயிற்றுவிக்க செயற்பாடு ஒன்றினை விளக்குக. (04 புள்ளிகள்)

(4) www.PastPapers.wiki (3)
Download Term Test Papers, Short Notes From One Place!

05. இனப் பெருக்க செயற்பாட்டின் மூலம் தனது இனத்தைப் பெருக்குவது சகல விலங்குகளுக்கும் பொதுவான இயல்பொன்றாகும். அதன்படி பால் நிலை தொடர்பாக கற்பதில் பாடசாலை மாணவர் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

i. ஆண் பெண் பால் நிலை எண்ணக் கரு என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

ii. பால் நிலை வகைப்படுத்தலின் அடிப்படைகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)

iii. பொறுப்பற்ற பாலியல் நடத்தை காரணமாக ஏற்படத்தக்க பாதிப்பான நிலைமைகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)

iv. பிள்ளைகள் தொடர்பில் பெற்றோருக்குள்ள பொறுப்புக்கள் நான்கு எழுதுக. (04 புள்ளிகள்)

06. நபர் ஒருவர் பிறப்பிலிருந்து இறப்பு வரை வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு பருவங்களைக் கடந்து செல்கின்றான். ஒவ்வொரு பருவத்திலும் ஏற்படும் போசணைத் தேவை வெவ்வேறானதாகும்.

i. உணவின் பிரதான போசணைக் கூறு இரண்டும் எவை. (02 புள்ளிகள்)

ii. நிறையுணவு வேளை என்றால் என்ன. (02 புள்ளிகள்)

iii. பிறந்து ஆறு மாதங்களின் பின் வழங்கக்கூடிய மேலதிக உணவுகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

iv. தாய்ப்பாலின் முக்கியத்துவம் நான்கு தருக. (04 புள்ளிகள்)

06. பாடசாலைகளில் வொலிபோல், வலைப்பந்து, காற்பந்து போன்ற விளையாட்டுக்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

i. வலைப்பந்து விளையாட்டின் திறன்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

ii. வலைப்பந்து விளையாட்டின் போது ஏற்படக்கூடிய தவறுகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)

iii. காற்பந்து விளையாட்டில் மைதான எல்லைக் கோட்டிற்கு வெளியே சென்ற பந்தை திரும்ப மைதானத்திற்கு கொண்டுவரப் பயன்படுத்தும் திறன் எது. (02 புள்ளிகள்)

iv. காற்பந்தாட்டத்தில் நீர் விரும்பிய திறன் ஒன்றை குறிப்பிட்டு அதனை பயிற்றுவிக்க பொருத்தமான செயற்பாடொன்றை விளக்குக. (4 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
(4) WWW.PastPapers.WiKi (4)

Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வயඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education - NWP

## வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
## Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2023
Third Term Test - Grade 09 - 2023

# சுகாதாரமும் உடற்கல்வியும்

விடைப்பத்திரம்

### பகுதி I

01. i
02. iv
03. ii
04. iii
05. iv
06. iii
07. iii
08. iv
09. iii
10. iv
11. ii
12. i
13. i
14. ii
15. i
16. ii
17. iii
18. i
19. i
20. iv

(2 x 20 = 40 புள்ளிகள்)

### பகுதி II

01. i. நீரிழிவுஇ கொலஸ்டரோல்இ அதிக நிறைஇ உயர் குருதி அழுத்தம்
ii. காற்றால்இ நீரால்இ விலங்குகளால்இ பாலியல் தொடர்புகள் உணவால்
iii. முன்னறிவித்தல் தரும் தொகுதிகளை அமைத்தல்இ முதலுதவி பற்றிய அறிவுஇ மனப்பாங்கு விருத்தி அவசர நிலைமைகளின் போது அறிவிக்க வேண்டிய இடங்கள்இ தொலைபேசி எண்கள்
iv. 6
v. விளையாட்டில் ஈடுபடல்இ புத்தகம் வாசித்தல்இ சித்திரம் வரைதல்இ மரம் நடுதல்
vi. 1.5L-2L
vii. சரியான விடைக்கு புள்ளி வழங்குக
viii. பாடசாலைக்கு அண்மையில் சிகரெட்இ மதுசார விற்பனை தடை செய்தல்இ பொது இடங்களில் தடை செய்தல்இ தண்டனை வழங்குதல்இ விளம்பரங்கள் தடை செய்தல்
ix. கிடை :- நீளம்இ முப்பாய்ச்சல்
நிலைக்குத்து :- உயரம்இ கோலூன்றி பாய்தல்
x. தலைமைத்துவ பண்பு விருத்திஇ குழு உணர்வு விருத்திஇ பொறுமைஇ வெற்றித் தோல்வியைத் தாங்குதல்இ தசை மற்றும் நரம்பு ஒத்திசைவு விருத்தி

(2 x 10 =20)

02. i. சமூக சுகாதார நிலையை மேலும் விரித்து செய்வதற்கு தனி நபருக்குத் தேவையான ஆற்றலை பெற்றுக் கொடுத்தல் என்ற கருத்திற்கு (02 புள்ளிகள்)
ii. . கவர்ச்சிகரமான சூழலை கட்டியெழுப்புதல்
. தொற்றும் தொற்றா நோய் குறைதல் (02 புள்ளிகள்)
. மரம் வளர்ப்பதால் சூழல் வெப்பம் தனிதல்
. சமூகத் தொடர்புகள் விருத்தியாதல் போன்ற

(2) WWW.PastPapers.WiKi (1)
Download Term Test Papers, Short Notes From One Place!

iii.. சிரமதானம்இ சூழல் அலங்காரம்இ காடு வளர்ப்பு திட்டம்இ வைத்திய சோதனைஇ டெங்கு ஒழிப்பு (02 புள்ளிகள்)

iv. . ஆரோக்கியம் தொடர்பான கொள்கை
. தனியாள் தேர்ச்சி மற்றும் அறிவு விருத்தி
. சுகாதார நேயமான சூழலை உருவாக்கல்
. சமூகப்பங்களிப்பை பெறல் போன்ற (02 புள்ளிகள்)

03. i. குறித்த மைதானத்தை பயன்படுத்தி விதிமுறைகளுக்கமைய உபகரணங்களுடன் அல்லது உபகரணமின்றி நிகழ்த்தப்படும் விளையாட்டு (2 பு.)

ii. ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் காணப்படல்.
. நியம அளவுகள் கொண்ட மைதானம் பயன்படுத்தல்
. குறிப்பிட்ட பிரமாணத்தில் தயாரிக்கப்பட்ட உபகரணம் பயன்படுத்தல் (2 பு.)
. பங்கு கொள்ள வேண்டிய வீரர்களின் எண்ணிக்கை குறிக்கப்பட்டிருத்தல்

iii. திறந்த வெளியில் சமைத்தல, வன ஆய்வு, சைக்கிள் பயணம், பட கோட்டல் போன்ற (2பு.)

iv. உடலியற் தேவை:- உடற்றகைமை விருத்தி, ஆரோக்கியம் கிடைத்தல், தசைகளும் எலும்புகளும் வலிமையடைதல் உள சமூக:- இயற்கை இரசித்தல், ஓய்வை பயனுள்ளதாக கழித்தல், (4 பு.) உள மழர்ச்சி ஏற்படல் மகிழ்வும், பொழுது போக்கும் கிடைத்தல்

04. i. தட்டெறிதல், ஈட்டி எறிதல், குண்டு போடல், சம்மட்டி எறிதல் (2பு.)

ii. . போட்டி இலக்கத்தை அறிவித்து ஒரு நிமிடத்துக்குள் எத்தனத்தை ஆரம்பித்தல்
. கையுறை அனுமதிக்கப்படமாட்டாது (2 பு.)
. தட்டு, குண்டு என்பன உரிய வட்டத்திலிருந்து ஆரம்பித்தல்

iii. நீளம் பாய்தல், முப்பாய்ச்சல, உயரம் பாய்தல், கோலூன்றி பாய்தல் (2 பு.)

iv. பொருத்தமான செயற்பாட்டுக்கு புள்ளி வழங்குக (2 பு.)

05. i. சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின் அடிப்படையில் ஆண் பெண் இருபாலரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள், வகிபாகம், கடமைகள் போன்றவை பால் நிலை தொடர்பான எண்ணக்கரு (2 பு.)

ii. தொழில், நடத்தை கோலம, ஆடையலங்காரம், விளையாட்டுப் பொருள் போன்ற (2 பு.)

iii. கல்விச் செயற்பாடு தடைப்படல், எதிர்பாராத கருத்தரிப்பு, உளரீதியான தாக்கம், பாலியல் தொடர்பான நோய் (2 பு.)

iv. போதியளவு போசணையைப் பெற்றுக் கொடுத்தல்
. சரியான கல்வியை வழங்குதல்
. அன்பு, அரவணைப்பு வழங்குதல் (4 பு.)
. விபத்துக்களிலிருந்து பாதுகாத்தல் போன்ற

06. i. மா போசணை முன்இ நுண் போசணை (2 பு.)

ii. உடலுக்குத் தேவையான போசணைக் கூறுகள் அனைத்தையும் உரிய அளவில் கொண்டுள்ள ஒரு வேளை உணவு (2 பு.)

iii. சோறு, கடலை, கௌப்பி, பயிறு, மீன், இறைச்சி, பால் (2 பு.)

iv. இயற்கையானது, நோய் எதிர்ப்புச் சக்தி காணப்படுதல், ஒவ்வாமை குறைவு, கிருமிகள் அற்றது, தூய்மையானது (4 பு.)

07. i. பந்துக் கட்டுப்பாடு, பாத பரிச்சயம், தாக்குதல், காத்தல், எய்தல் (2 பு.)

ii. சரியான விடைக்கு (2 பு.)

iii. உள்ளெறிகை (2 பு.)

iv. சரியான விடைக்கு (4 பு.)

PAST PAPERS WIKI

(2) WWW.PastPapers.WiKi (2)



Download Term Test Papers, Short Notes From One Place!

LOL.lk
**BookStore**

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**